# இவனைச்
# சிலுவையில்
# அறையுங்கள்



வி. மைக்கல் கொலின்

கவிதைகள்

மகுடம்

# இவனைச்
# சிலுவையில்
# அறையுங்கள்

வி.மைக்கல் கொலின்

மகுடம்
இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

Title :
**Ivanai Siluvaiyil Araiyunkal**
**© W.Michael Collin**

ISBN : 978 - 624 - 5849 - 00 - 0

மகுடம் பதிப்பக வெளியீடு - 41

நூல் தலைப்பு:
**இவனைச் சிலுவையில் அறையுங்கள்**

நூல் ஆசிரியர்:
**வி.மைக்கல் கொலின்**

வகை : **புதுக்கவிதை**

முதற்பதிப்பு : கார்த்திகை 2021

விலை : 300.00

பக்கங்கள் : 72

பதிப்பாளர்
**வி.மைக்கல் கொலின்**

ஓவியங்கள்
**இரா. குணசீலன் (கனடா)**

நூல்வடிவமைப்பு:
**த.சங்கர்**

அச்சு :
**வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு.**

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளர் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும் புத்தக விமர்சனத்திற்கு மட்டும் புத்தகத் திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகின்றது

மகுடம>

**இல.90, பார்வீதி,**
**மட்டக்களப்பு 30000, இலங்கை.**
**தொ.பே.இல. 0774338878,**
magudammichael@gmail.com

# பதிப்புரை

## மனித மொழியில் ஓர் புதிய விளக்கம்

**வி.** மைக்கல் கொலின்

ஈழத்து இலக்கியப் பரப்பில் தவிர்க்கவியலாத பெயர். திருகோண மலையைப் பிறப்பிடமாகவும், சமகாலத்தில் மட்டக்களப்பினை வசிப்பிடமா கவும் கொண்ட இவர் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற இரு மாவட்டங்களின் கலை இலக்கிய வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஆற்றிவரும் காத்திரமான பணிகள் காலம் அறிந்தது.

கவிஞர்,
எழுத்தாளர்,
குறும்பட இயக்குனர்,
சஞ்சிகையாளர்,
பத்திரிகையாளர்,

வெளியீட்டாளர் என பல்பரிமாணத் தளங்களில் இயங்கி வருபவர். இயங்குதல் என்பதற்கப்பால் மேற்குறித்த துறைகளில் தனது ஆளுமையை பதித்து வருபவர். 1992களில் வெளிவந்த இவரது **“என் பிரிய ராஜகுமாரிக்கு”** என்ற புதுக்கவிதைத் தொகுதியே திருகோணமலை மண்ணில் அச்சில் வெளிவந்த முதல் புதுக்கவிதைத் தொகுப்பாகும்.

கிழக்கு மண்ணில் இருந்து முதன்முதலாக தொலைக்காட்சி நாடக நெறியாள்கையில் “டிப்ளோமா” முடித்தவரும் இவரே. இதன் நீட்சியாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய தொலைக் காட்சி நாடக பிரதியாக்கல் போட்டியில் அகில இலங்கை ரீதியாக பரிசு பெற்ற **“மரபை மீறும் மானுடம்**” என்ற தனது நாடக பிரதியினை 1993ல் குறும்படமாக நெறியாள்கை செய்தார். இதுவே திருகோணமலையின் முதல் குறும்படம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் 1985 - 1995 வரை இவர் வெளியிட்ட “தாகம்” கலை இலக்கிய புரட்சிகர முற்போக்கு இதழே திருமலையில் தொடர்ந்து பத்து வருடங்களாக வெளிவந்த ஒரே இலக்கிய இதழாகவும் ஒரு இளம் எழுத்தாள குழாமை உருவாக்கிய பெருமையும் கொண்டது.

மட்டக்களப்பில் இருந்து 1998இல் வெளியான “தினக்கதிர்” வாரமலர் 2000 இல் வெளிவந்த "தினக்கதிர்“ நாளிதழ் ஆகியவற்றின் உருவாக்கத்தில்

முக்கிய பங்காற்றி முறையே அதன் பிரதம ஆசிரியர், இணை ஆசிரியர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

2012 தொடக்கம் மட்டக்களப்பில் இருந்து “மகுடம்” என்ற கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழை வெளியிட்டுவரும் மைக்கல் கொலின் வெளியீட்டாளராக தாகத்தின் மூலம் ஆறு நூல்களையும் மகுடத்தின் மூலம் **நாற்பத்தியொரு** நூல்களையும் இதுவரை வெளியிட்டுள்ளார்.

இவர், முழுக்க முழுக்க இதிகாச புராணங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தி எழுதிய **பரசுராமபூமி** என்ற சிறுகதைத்தொகுப்பே ஈழத்தின் இதிகாச புராண, மறைநூல்களை மறுவாசிப்புக்குட்படுத்தி வெளிவந்த முதல் சிறுகதைத் தொகுப்பாகும். இது 2018ம் ஆண்டுக்கான கிழக்குமாகாண சாகித்திய விருதினை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவரது இரண்டாவது கவிதைத்தொகுப்பு **சிலுவைகளே சிறகுகளாய்** 2019ல் வெளிவந்து, அவ்வாண்டுக்கான தேசிய சாகித்திய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களில் ஒன்று என்ற தகுதிச் சான்றிதழ் பெற்றது. மேலும் இது அவ்வாண்டுக்கான இந்திய திருப்பூர் இலக்கிய விருதையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவரது நான்காவது நூலாக வெளிவந்த “**வீணையடி நீ எனக்கு**” என்ற நாவலே கிழக்குப் பலகலைக்கழக வாழ்வியலை சொல்லிய முதல் நாவலாகும்.

மைக்கல்கொலினின் ஐந்தாவது நூலாகவும் மூன்றாவது கவிதை நூலாகவும் வெளிவரும் “இவனைச் சிலுவையில் அறையுங்கள்’ பாஸ்கா கால கவிதைகள் கிறிஸ்தவ இலக்கியத்தில் முதல் முயற்சியாகும். கத்தோலிக்கர்கள் அனுஷ்டிக்கும் 40 நாளுக்கு மேலான நோன்பிருத்தலில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு கவிதையாக 2021ம் ஆண்டின் பாஸ்கா காலத்தை சிறப்பித்து பாடப்பட்ட கவிதைகள் இவையாகும். அந்த வகையில் புதிய ஏற்பாட்டை மறு வாசிப்புக்கு உட்படுத்திய முதல் கவிதை நூல் இதுவாகும்.

ஒரு முன்னுரையில் எழுத வேண்டியதை பதிப்புரையில் ஏன் எழுதுகிறேன் என நீங்கள் யோசிக்கலாம். கவலையில்லை. வடிவமாற்றம் தமிழ் கவிதைக்கு ஒன்றும் புதிதல்ல. புரட்சியுமல்ல. காலம் தோறும் தமிழ்க் கவிதையில் வடிவமாற்றம் நிகழ்ந்து கொண்டுதான் இருந்திருக்கிறது.

அகவற்பா, வஞ்சியப்பா, கலிப்பா, வெண்பா என்கிற நான்கு வகைப்பாக்கள் போதாதென்று விருத்தம், சந்து, சிந்து என விஸ்தாரம் கொண்டிருக்கிறது. ஓசை நயம், அடியளவு இப்படி வகை வகையாய்.

தமிழ்க் கவிதையில் அளவான ஓசை நயம். எதுகை மோளை, முரணழகு - இவற்றையெல்லாம் மரபில் ஊறித்திளைத்த கவிஞனால்

விலக்கிலிட முடியாது. வலிந்து இவற்றை மீறிச் செல்வதுதான் நவீன கவிதையென்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தன்னியல்பாக உள்ளதை ஏன் விலக்க வேண்டும் என புரியவில்லை.

லண்டன் பாதாள ரயிலில் குறுந்தொகைப்பாடல் இடம்பெறுகையில் நம் நவீன கவிஞர்கள் உள்ளத்தில் எவ்வாறு அது இடம்பெறாது போகலாம்?

கவிதை என்பது சுண்ணாம்பு அடிப்பதல்ல, சுவர் வைப்பது. வேதாகமத்திலிருந்து அழியாத கற்களைப் பொறுக்கி ஒரு புது ஆலயத்தை வடிவமைத்திருக்கிறார் கொலின்.

“வானமும் பூமியும் அழிந்து போகும் என் வார்த்தைகள் மட்டும் அழியாதது” என்று சொன்ன யேசு இந்த நூலை வாசித்தால் என்ன நினைப்பார் என்று கற்பனை செய்தேன். காத்திருக்கவிருப்பமில்லாத உடனடித் தீர்வை விரும்பும் மக்கள் என்று நம்மை மட்டுக்கட்டியிருப்பார்.

“தட்டித் திறக்காவிடின் உடையுங்கள். கேட்டுக் கொடாது விட்டால் பறித்துக் கொள்ளுங்கள் தேடிக் கிடைக்காவிட்டால் போராடிப் பெறுங்கள்’ என்கிற கவிதையில் ஸ்பட்சமாக இதனைக் காணலாம். யாவுமே மறுவாசிப்புக்கு உள்ளாகும் போது வேதாகமத்தையும் தவிர்த்துவிட முடியுமா?

கொலினின் கவிதைகள், வசன கவிதை மரபு சார்ந்தது. உள்ளீட்டில் கவனம் செலுத்துவது. நேரடித்தன்மை கொண்டதால் உத்திகளில் அக்கறை கொள்ளாதது, மிகையில்லாதது. “பளிச்’ சென்று சொல்வது இத்தொகுப்பிலும் அவ்விதமான பண்புகளின் சுரடுகளை நுகரலாம்.

ஒரு காலத்து வேதவசனங்கள் சம காலத்தோடு எவ்விதம் பொருந்திப் போகின்றன என்கிற பரிசோதனை, இறைவனை மனிதனிலிருந்து பிரிக்க முடியாதெனச் சொல்வது. தன்னலம் துறந்து மனித இனத்துக்காய் சிந்திப்பதும், அதனால் ஏற்படும் இழப்பும், அதனூடாக நிகழும் உயிர்ப்பும் மட்டுமே மெய்யானது என உணர்த்துவதாய் நூல் விரிகிறது.

இயற்கையோடு இணைந்து ஒன்று மற்றொன்றுடன் ஊடாடிக் கலந்தாலொழிய மனித விடுதலை சித்திக்காது என்பது நூலின் அடிநாதம்.

இறைவார்த்தை மனிதனால் இலகுவில் புரிந்து கொள்ள முடியாதது. அதையே மனிதன் மொழிபெயர்த்தால் எப்படி இருக்கும்? அதுதான் இந்நூல்!

வாழ்த்துகளுடன்,

- கவிஞர். **அ.ச.பாய்வா**

# அணிந்துரை

## சமூக அசைவுக்கும் மாற்றத்திற்குமான கவிதைகள்

திருவாளர் மைக்கல் கொலின் அவர்களின் கைவண்ணத்தில் உருவான 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்கிற புதுக்கவிதைத் தொகுப்பிற்கு அணிந்துரை வழங்குவதில் இணையிலாப் பேருவகை அடைகிறேன். 'மைக்கல் கொலின்' என்கிற நாமம் இன்று தமிழ் இலக்கியப் பரப்பில் பேசுபொருளாகிய நாமமாகும். கவிதை, சிறுகதை, நாவல் போன்ற ஆக்க இலக்கியத்தில் தன்னையே ஆழப் பதித்துக்கொண்ட நாமமாகும். அதற்கப்பால் 'மகுடம்' எனும் காலாண்டு இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியரும், பதிப்பாசிரியருமாவார். 'மகுடம்' பதிப்பகத்தின் வாயிலாக பலரது நூல்களை வெளிக்கொணர்வதில் ஆர்வமுடன் செயற்படுகின்ற இலக்கியச்சிற்பியுமாவார். இன்று மட்டக்களப்பில் இருந்துகொண்டு அங்கும் இங்கும் பம்பரமாய் சுழன்றுகொண்டு தமிழின் ஆக்க இலக்கிய வளர்ச்சிற்கு பெரிதும் பங்களிப்புச் செய்கின்ற மைக்கல் கொலின் என்றுமே எமது பாராட்டுக்குரியவரே!

வரலாற்றுத் தொன்மங்களை மறந்து போகின்ற காலகட்டத்தில், தொன்மங்களைத் தேடிப்படிப்பதில் கொலினுக்கு தனியொரு விருப்புண்டு. அவற்றை வெறுமனே படிப்பதோடு மட்டுமல்லாது, அவற்றிற்கான மீள்வாசிப்பினூடாக தான் அறிகின்ற, சொல்ல விளைகின்ற கருத்துக்களை தனது கதைகள், கவிதைகளூடாகச் சொல்வதில் சாமர்த்தியத் திறமை கொண்டவர்தான் மைக்கல் கொலின். அவரது சிறுகதைத் தொகுப்பாகிய 'பரசுராமபூமி' அத்தகைய இலக்கிய வடிவத்தினை ஒத்தது. அந்த வரிசையில் 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்கிற புதுக்கவிதைத் தொகுப்பு விவிலியத் தொன்மங்களை மீள்வாசிப்பு செய்ததனால் பிறந்ததாகும்.

'பரசுரராமபூமி'யில் விவிலியக் கதைகளைப் பயன்படுத்தி அவற்றிற் கான மீள்வாசிப்பினுடாக புதிய கருத்துக்களை விதைத்த கொலின் அவர்கள் 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்கிற கவிதைத்தொகுதியின் வாயிலாக இன்னும் பல செய்திகளை நம்மோடு புதிதாக பகிர்ந்து கொள்கிறார். ஒரு நூலின் தொன்மத்தினை அறிந்துகொள்ள வேண்டுமாயின் அந்நூல் எழுதப்பட்ட காலம், அக்கால மக்களின் வாழ்க்கைமுறை, அக்காலகட்ட மக்கள் பேசிய மொழி, அக்கால சமூக, சமய, அரசியல் பின்னணிகள் போன்றவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கிறிஸ்தவர்களின் புனித நூலாகிய

திருவிவிலியத்தின் பகுதிகளை அறிய வேண்டுமாயின் நாமும் அக்காலகட்ட மக்களின் வாழ்வியலை அறிந்துகொண்டால் மட்டுமே உண்மையான, சரியான விளக்கத்தினை வழங்க முடியும். அந்தவகையில் 'விவிலியப் பொருள்கோள் முறை' விவிலியப் பகுதிகளுக்கான விளக்கத்தினை அறிந்து கொள்வதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. விவிலியப் பொருள்கோள் முறையினைப் பயன்படுத்தி விவிலியப் பகுதிகளை பகுப்பாய்வு செய்வது விவிலிய வல்லுநர்களினதும், இறையியலாளர்களினதும் பணியாகும். ஆயினும் சாதாரண பாமரனும் விவிலியத்தினை வாசித்து அதனைத் தியானிப் பதிபினூடாக தனக்கு கிடைக்கின்ற செய்தியினை பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பினைப் பெறுகின்றான். விவிலிய வாசிப்பானது ஒவ்வொரு தடவையும் வாசிக்கின்றபோது அதில் நம்பிக்கை கொள்வோருக்கு அவர்கள் வாழ்கின்ற சூழமைவுக்கேற்ப புதிய புதிய செய்தியினைக் கொடுக்கின்றது. விவிலிய வாசிப்பானது அத்தகைய புதிய புதிய செய்தியினை நம்பிக்கையாளர்களுக்கு கொடுக்க வேண்டியது கட்டாயமாகும். ஏனென்றால் விவிலியம் என்பது வெறும் தொன்மம் கிடையாது, மாறாக அது இன்றும் வாழப்படுகின்ற நூலாகும்.

எல்லா சமயத்தவரையும் போன்று கிறிஸ்தவ சமயத்திலும் பல்வேறுபட்ட வழிபாட்டுக் காலங்களும், வழிபாட்டுச் செயற்பாடுகளும் காணப்படுகின்றன. கிறிஸ்தவர்களின் வழிபாட்டுக் காலத்தில் அதிக கவனத்தை ஈர்க்கின்ற காலம் தவக்காலமாகும். இத்தவக்காலமானது நாற்பது நாட்களைக் கொண்ட இயேசுகிறிஸ்துவின் பாடுகள், மரணம் போன்றவற்றை தியானிக்கின்ற காலமாகும். இத்தியானமானது இறுதியில் அவரின் உயிர்ப்புடன் நிறைவு காண்கிறது. இத்தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பல்வேறு விதமான வழிபாட்டு மற்றும் பக்தி முயற்சிகளிலும் ஈடுபடுவார்கள். அவற்றுள் சிலவாக, நாற்பது நாட்களும் திருப்பலியில் பங்கெடுத்தல், சிலுவைப்பாதை பக்தி முயற்சியில் ஈடுபடுதல், உண்ணா நோன்பினை மேற்கொள்ளுதல், மாமிச உணவினைத் தவிர்த்தல், உடலுக்கும் உள்ளத்திற்கும் கெடுதல் தரக்கூடிய செயல்களைத் தவிர்த்தல், கல்வாரித் திருத்தலங்களை நோக்கி திருப்பயணங்களை மேற்கொள்ளுதல், புகழ்பூத்த யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரால் எழுதப்பட்ட 'வியாகுல பிரசங்க'த்தினை படிப்பதன் வாயிலாக இயேசுவின் பாடுகள், மரணத்துடன் ஒன்றித்தல், இவை போன்ற இன்னும் பல செயற்பாடுகளில் ஈடுபடுவர். இச்செயற்பாடுகளில் தனியாகவோ, குழுவாகவோ ஈடுபடுவார்கள்.

கடந்த இரண்டு வருடங்களாக 'கொவிட் 19' பெருந்தொற்று காரணமாக அவ்வப்போது ஆலய வழிபாடுகள் முடக்கப்படுவதும் பின்னர்

திறந்து விடப்படுவதுமான சூழ்நிலையில் 2021ஆம் ஆண்டின் தவக்காலச் சூழலில் மைக்கல் கொலின் அவர்களால் முகநூலில் நாற்பத்தி ஏழு நாட்களாக எழுதப்பட்ட தவக்காலக் கவிதைகளின் தொகுப்பே 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்பதாகும். அக்கவிதைகளினூடாக மைக்கல் கொலின் அவர்களும் தனது தவக்காலப் பயணத்தினை மேற்கொண்டுள்ளார் என்றுதான் சொல்ல வேண்டும். நான் அறிந்த வகையில் 80களின் பிற்பாடு இயேசுவின் வாழ்வினை மையப்படுத்திய நற்செய்தி நூல்களை ஒரு சிலர் காவியங்களாக வடித்துள்ளார்கள். அந்தவகையில் 1982இல் வெளிவந்த கவியரசர் கண்ணதாசன் அவர்களின் இறுதிக்காவியமாகிய 'இயேசு காவியம்', அதனைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டில் அருட்தந்தை வின்சன்ட் சின்னதுரை என்பவரின் 'புதிய சாசனம்', தொடர்ந்து பெண் கவிஞர் நிர்மலா சுரேஸ் அவர்களின் 'இயேசு மா காவியம்' புலவர் ம. அருள்சாமி என்பவர் எழுதிய 'இதோ மானிடன்' என்கிற தொகுப்புக்களும் வெளிவந்துள்ளன. இவற்றைவிட இயேசுவின் வாழ்வினைக் குறித்த பல காவியங்கள் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் பாடப்பட்டுள்ளன.

மைக்கல் கொலின் அவர்களின் இத்தொகுப்பானது இயேசுவின் வாழ்வினை முழுமையாகத் தருகின்ற ஒரு காவியம் கிடையாது. அத்தோடு நற்செய்தியினை புதுக்கவிதை வடிவில் இயக்கித் தருகின்ற முயற்சியும் கிடையாது. இது இயேசுவின் நற்செய்தியினை மீள் வாசிப்புக்கு உட்படுத்திய முயற்சியாகும். தவக்கால இறைவார்த்தைப் பகுதிகளை தன்பாணியில் சிந்தித்து சமூக அசைவுகளுக்கும், வாழ்வியலுக்குமேற்ப மீள்வாசிப்பினை மேற்கொண்டு நமது சிந்தனைகளைத் தூண்டியெழுப்பி, நம்மையும் சிந்திக்க வைக்கின்ற புதிய முயற்சியாகும். அவரது கவிதைகள் நேரடிக் கருத்து நோக்கியது. அதனூடாக தாம் செல்ல வருகின்ற கருத்தினை எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் தருகின்றார்.

கொலினின் விவிலிய மீள்வாசிப்பானது பாரம்பரியத்தினைப் பேணுகின்றவர்களுக்கு சற்று நெருக்கடியாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவரது கவிதைகள் பேசும். இயேசுவின் வார்த்தைகள் "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள்" என்றிருக்க கொலின் தனது மீள் வாசிப்பினூடாக "திறக்காவிட்டால் உடையுங்கள், கொடாதுவிட்டால் பறித்துப் பெறுங்கள், கிடைக்காவிட்டால் போராடிப் பெறுங்கள்" என்பதனூடாக தற்கால சமூகப் போக்கினை படம் பிடித்துக் காண்பிக்கின்றார். அதுமட்டுமல்லாது இயேசுவை ஒரு சமூகப் போராளியாகவும், மார்க்சிய சித்தாந்தவாதியாகவும்

காண்பிக்கின்றார். பாட்டாளி மனித வர்க்கம் தனது தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள தட்டி, கேட்டு, தேடிப் பெறமுடியாது மாறாக உடைத்து, பறித்து, போராடித்தான் பெறமுடியுமென்கிற யதார்த்தத்தைக் காண்பிக்கின்றார். அவ்வாறே மற்றுமொரு கவிதையாகிய விபசாரத்தில் பிடிபட்ட பெண் என்கிற விவிலிய உரையாடலில் இயேசு குற்றம் சுமத்தியவர்களை குற்றவாளிகளாக தமது வார்த்தைகளால் இனம் காட்டியபோது அவர்கள் அவ்விடமிருந்து அகன்றார்கள் என்றுவர, கொலினோ 'உங்களில் பாவம் இல்லாதவர் முதலில் கல் எறியட்டும்' என்று கூறிவிட்டு இயேசு குனிந்து மனிதத்தைத் தேடினார் என்கிறபோது பெண்ணின் தலையில் எறியப்பட்ட கல்பட்டு இரத்தம் சிந்தியது என்பதனூடாக பாவம் செய்து மரத்துப்போய்விட்ட மனித சமூகத்தினுள்தான் வாழ்கின்றோம், அது திருந்துவதற்கான வாய்ப்பினை இழந்துவிட்டது, அது தொடர்ந்தும் பாவங்களை செய்த வண்ணமேயிருக்கும் என்கிற யதார்த்த நிலையினை புடம்போட்டு காட்டுகின்றார்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதற்கொப்ப கொலினின் விவிலிய மீள் வாசிப்பு கவிதைகளான 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' இன்றைய நவீன கால வாழ்வியல் போக்கினையும், அறம் விலகிய சமயப் பாங்கினையும் சாடுகின்றதாக அமைவதும் நோக்கத்தக்கதாகும். தனது புதுக்கவிதைகள் ஊடாக சமூக மாற்றத்திற்கான செய்தியினையும் தொட்டு செல்வது அவரது சமூகம் சார்ந்த பார்வையினையும் வெளிக் காட்டுகின்றது. காலத்தின் புதிய வரவாகிய 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்கிற மைக்கல் கொலினின் விவிலிய மீள்வாசிப்பு கவிதைத் தொகுப்பானது புதிய முறையில் விவிலியத்தினை சிந்திக்கத் தூண்டுகின்ற தூண்டிலாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

இலக்கிய நற்பணி தொடர வாழ்த்துக்கள்.

- அருட்பணி. **அ. அகஸ்தீன் நவரெத்தினம்**
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
21.07.2021

# அணிந்துரை

## வேதாகமத்தின் வாசனை வீசும் கவிச்சொற்கள்

தமிழ்க்கவிதை மரபில் செவ்வியல் அகக்கவிதைகளுக்கு நீண்ட தொடர்ச்சியும் நீட்சியும் உண்டு. அத்தொடர்ச்சியை உரிப்பொருள் சார்ந்த நீட்சி எனவும், வடிவம் சார்ந்த நீட்சி என்றும் அடையாளப்படுத்தலாம். அன்பின் ஐந்திணைகளான முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை என்பனவற்றின் உரிப்பொருட்களான இருத்தல், ஊடல், புணர்ச்சி, இரங்கல், பிரிவு என்பனவற்றிற்கு அதிகம் தொடர்ச்சி உண்டு. அதனை இங்கே விரிவாகச் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்றால் அந்த நீட்சியை மைக்கல் கொலினின், “இவனைச் சிலுவையில் அறையுங்கள்” எனத் தலைப்பிட்ட கவிதைத் தொகுதியில் காணமுடியவில்லை. அதற்கு மாறாக அகக்கவிதையின் வடிவத் தொடர்ச்சியின் நீட்சியாக அவரது கவிதைகள் அமைந்துள்ளன. அப்படியான ஒரு தொனி ஒவ்வொரு கவிதையையும் வாசிக்கும்போது என்னை வந்து மோதுவதை உணர்ந்துகொண்டே இருக்க முடிந்தது.

அகக்கவிதைக்குள் கவிதையின் சொல்லியாக உருவாக்கப்படும் தோழி, செவிலி, பாங்கன், தாய், கண்டோர் போன்ற துணைப் பாத்திரங்கள் முதன்மைப் பாத்திரங்களான தலைவனை நோக்கியும் தலைவியை நோக்கியும் உரையாடுவார்கள். அப்படி உரையாடும்போது கேட்கும் இடத்தில் இருக்கும் முதன்மைப் பாத்திரங்களைக் கடிந்துரைக்காமல், “சூழலைப் புரிந்துகொண்டு முடிவெடுங்கள் இதுதான் நல்லது இதற்கு மாறாகச் செயல்பட்டால் பிழைகள் வந்துவிடும் ஊர் அலர் தூற்றல் நிகழலாம் எதிர்காலம் சிக்கலாகலாம்” போன்ற ஆலோசனைகளை முன்வைப்பர். அதனைக் கேட்டுத் தலைவனும் தலைவியும் நல்ல முடிவுகளை எடுப்பார்கள். இந்தக் கோரிக்கையும் முடிவெடுப்பதுமான உரையாடல் வடிவமே அகக்கவிதையின் எளிமையான வடிவம். இந்த எளிய வடிவத்தைப் பக்திக் கவிதைகள் தனதாக்கிக் கொண்டன. பக்தனின் நிலையில் தங்களை வைத்துக்கொண்டு, தங்களுக்கு அருள் செய்யவேண்டிய இட த்தில் இருக்கும் இறையிடம் தங்களின் நிலையை இயலாமை, துயரம், இன்னல், வறுமை, பிணி, குற்றநிலை, அறியாமை போன்றனவற்றை முன்வைத்து வேண்டுவார்கள். அப்படி வேண்டுவதின் நோக்கம், அதனைப் பொறுத்து அருளவேண்டும் தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என இறைஞ்சுவதுதான்.

பைபிள் என்னும் வேதாகமத்தின் சொல்லாடல்களில் முக்கியமானவை அன்பு, எதிர்பார்ப்பு, நம்பிக்கை, இரக்கம் போன்றனவாக வெளிப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக இறைப்பற்று என்பது எளிய மனிதர்களின் மீதான பற்றும் சேவைகளுமே இரக்கமும் பிணிநீக்கமும் என்பனவும் வெளிப் பட்டுள்ளன. இவற்றை வலியுறுத்த எதிர்மறைச் சொல்லாடல்களாக பாவம், குற்றம், சாபம், தண்டனை போன்றனவற்றையும் விரிவாகப் பேசுகிறது வேதாகமம். முன்னிலை நோக்கிப் பேசும் உரையாடல்களாகவும் உருவகங்களா கவும் எழுதப்பெற்ற வேதாகமத்தைப் பள்ளிக்காலத்தின் விடுதி வாழ்க்கையில் கேட்டு வளர்ந்தவன். அந்தக் கதைகளும் கவிதைத் தன்மைகளும் எனது தன்னிலையை உருவாக்கியதில் முக்கியப் பங்காற்றியவை என்றுகூடச் சொல்லலாம்.

இறையைத் தலைமைப் பாத்திரமாக முன்னிறுத்திப் பக்தியைச் செலுத்தும் மானுடர்களை இரங்கலுக்குரியவர்களாக ஆக்கிக்கொண்டு தங்களை முன்வைக்கும் தமிழ்ப் பக்திக்கவிதையின் வடிவத்தை உலகின் பக்திக் கவிதை வடிவமாகவே சொல்லலாம். ஒருவிதத்தில் இது மன்றாட்டு நிலை. இந்த மன்றாட்டு நிலையை குர்ரானிலும் வாசிக்கமுடியும் வேதாக மத்திலும் காணமுடியும். தேவகுமாரனின் செயல்களையும் வாழ்க்கையையும் உருவகக்கதைகள் வழியாகவும், நேரடி உரைகள் வழியாகவும் பேசும் மத்தேயு, யோவான், லூகாஸ், பேதுரு போன்ற இறைத்தூதர்களின் எழுத்து களைத் தாண்டி சங்கீதம், கொரிந்தியர் போன்றன தன்னிலையை முன்வைத்து இறைஞ்சும் கவிதை வடிவம் கொண்டவை. அவ்வடிவத்தைத் தனது கவிதைக்கான வடிவமாக ஆக்கியிருக்கிறார் மைக்கல் கொலின். ஆனால் அதனை அப்படியே உள்வாங்கிக் கொள்ளாமல் நிகழ்காலத்துக்கேற்ற மாற்று களோடு வெளிப்பட்டுத்தனது அடையாளத்தை உருவாக்கியுள்ளார் கவிமைக்கல்.

அந்த மாற்றம் நிகழ்கால மனிதர்களைக் கண்டு அவர்களின் தன்னலம், ஆசை, குற்றச்செயல், நம்பிக்கையின்மை, அந்தரங்கமான தீவினைகள், தெரிந்தே செய்யும் தவறுகள் போன்றனவற்றைக் கண்டு அடையும் எரிச்சலும் கோபமாக வெளிப்பட்டுள்ளன. நம்பிக்கைத் துரோகம், காட்டிக்கொடுத்தல், பேராசை, இரக்கமின்மை போன்றவற்றைத் தனிநபர்களாகவும் அமைப்பின் வழியாகவும் செய்யும் சூழலைக் கடுமையான சொற்களால் முன்வைக்காமல் கவி மைக்கல் கொலின், வேதாகமத்தின் சொல்லாடல்களைப் போலவே முன்வைக்கின்றார்.

வேதாகமத்தின் தொனியை உள்வாங்கிக் கொண்டு அதில் இடம்பெற்ற பல உவமைக் கதைகளையும் உருவகங்களையும் நமது காலத்திற்கேற்ப

மறுவிளக்கமும் மறுவாசிப்பும் செய்துள்ள வகையில் இந்தக் கவிதைகள் நவீனத்துவக் கவிதைகளாக வெளிப்பட்டுள்ளன. இந்தக் கவிதைகளை வாசிக்கும்போது ஒவ்வொரு பக்கத்திலும் வேதாகமத்தின் மொழியின் ஓசை நுட்பத்தையும் முன்மொழிவுத் தாள லயங்களையும் உணர்ந்துகொண்டே வாசிக்க முடிந்தது. இந்தக் கூற்றுகளை விளக்குவதற்காக க் கவிதைப்பரப்பில் சில கவிதைகளை எடுத்துக்காட்டிப்பேசலாம். அதைவிடவும் அந்த வாசிப்பை யும் புரிதலையும் வாசிப்பின்பத்தையும் உங்களுக்கே விட்டுவிடுகிறேன்.
கவி மைக்கல் கொலினுக்கு வாழ்த்துகள்

**- பேரா. அ.ராமசாமி**
தமிழ்நாடு

# என்னுரை

## மனிதம் பாடும் கவிதைகள்

2021.02.17 கத்தோலிக்கர்களின் பாஸ்கா காலத்தின் ஆரம்ப நாள் விபூதிப்புதன். அன்று மாலை தேவாலயத்தில் திருப்பலி பூசையில் கலந்து கொண்ட வேளை மனதில் ஓர் மின்னல் வெட்டியது.

பாஸ்கா காலத்தின் ஒவ்வொரு நாளையும் பாடுகளின் பாதையை தியானித்துக் கவிதைகளாக்கினால் என்ன என்ற நினைப்பு வந்தவுடன் கவிதையும் மனதில் தோன்றியது.

திருப்பலி முடிந்தவுடன் ஆலய வளவுக்குள் வைத்தே பாஸ்கா காலத்தின் முதல் கவிதையை எனது முகநூலில் பதிவேற்றினேன். நாற்பத்தி ஏழு நாட்கள் நாற்பத்தியேழு கவிதைகள், ஒவ்வொன்றும் புனித வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டின் நாயகன் இயேசு கிறிஸ்துவுடன் தொடர்பான சம்பவங்கள் அவரது போதனைகள், அவர் மக்களுக்கு சொன்ன உவமைகள் என ஒவ்வொன்றையும் மறுவாசிப்புக்குட்படுத்திய கவிதைகள் இவை.

இந்த கவிதைகளுக்காகவே மீண்டும் வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டினை படிக்கத் தொடங்கினேன். ஒவ்வொரு சம்பவமும் ஒவ்வொரு போதனையும் இன்றைய சமகால எம் வாழ்க்கை முறைக்கு மிகவும் நெருக்கமாக பொருந்திப் போவதை அவதானித்த போது வாழும் சமயத்தின் தன்மை புரிந்தது.

புதிய ஏற்பாட்டின் சம்பவங்கள் குறிப்பாக இயேசுவுடன் தொடர்புபட்ட ஒவ்வொரு நிகழ்வுகளும் எம் மண்ணின் நிகழ்வோடு எம் மக்களின் வாழ்வோடு இணைந்து நின்றது. பிணைப்பைச் சொன்னது.

ஒரு மதத் தலைவரின் கருத்துக்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தும் போது, அதனை மாற்றி எமது சமகாலத்திற்கு பொருத்திப் பார்க்கையில் ஏற்படும் சிக்கல்களை தவிர்க்க எனது சில கவிதைகள் தொடர்பாக அருட்பணி. நவாஜி அடிகளாரைத் தொடர்பு கொண்ட போது "இயேசு கிறிஸ்து இன்றிருந் தால் இக் கருத்துக்களையே வெளிப்படுத்தியிருப்பார். நீங்கள் தொடர்ந்து எழுதுங்கள்" என்றார். அவரது கருத்துக்கள் புதுத் தெம்பைத் தந்தது. உலகின் முதல் புரட்சி நாயகன் இயேசு கிறிஸ்து அல்லவா?

இக் கவிதைகள் ஒவ்வொன்றும் எனது முகநூலில் பதியப்பட்டவேளை தினமும் இது தொடர்பான பல கருத்தாடல்கள் நடந்தன. அனைத்தையும் மீறி பாஸ்கா காலத்தின் முழுமையையும் பூர்த்தி செய்து உயிர்த்த ஞாயிறு

வரை இக் கவிதைகள் தொடர்ந்தது.

இது தமிழ்க்கவிதைப் பரப்பில் ஓர் புதிய முயற்சி. இது புனித வேதாகமத்தை அப்படியே கவிதையில் தரும் முயற்சியல்ல. ஒவ்வொன்றும் மறு வாசிப்புக்குட் படுத்தப்பட்ட கவிதைகள். அந்த வகையில் இது நவீன தமிழ் கவிதைப் பரப்புக்கும் கத்தோலிக்க இலக்கிய முயற்சிக்கும் முதல் முயற்சியாகும்.

பாஸ்கா காலத்தின் முழு நாட்களுக்கும் கவிதை சொல்லி வெளிவரும் முதல் தொகுப்பு என்ற வகையில் பெருமைதான்.

இக் கவிதைகள் எனது முகநூலில் வெளிவந்த காலங்களில் இதில் இருபதுக்கு மேற்பட்ட கவிதைகளை தினகரன் பத்திரிகையில் பிரசுரித்து சிறப்பித்த நண்பர் பிரபல ஊடகவியலாளர் திரு. லோரன்ஸ் செல்வநாயகம் அவர்களுக்கு எனது அன்பும் நன்றியும்.

இக் கவிதை நூலுக்கான சிறப்பான அணிந்துரைகளை வழங்கிய அன்புக்குரிய பேராசிரியர் அ. ராமசாமி (இந்தியா) அவர்களுக்கும், கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்பணி அகுஸ்தீன் அன்ரனி நவரெட்ணம் அடிகளாருக்கும் (நவாஜி), பதிப்புரை வழங்கிய கவிஞர். அ.ச. பாய்வா அவர்களுக்கும் எனது இதய நன்றிகள்.

இக் கவிதைகள் ஒவ்வொன்றுக்கும் தனது தூரிகையால் அழகோ வியங்கள் தந்த கனடா நண்பர் ஓவியர். இரா. குணசீலன் அவர்களுக்கும், எனது நூல்களை விஷேட கவனமெடுத்து வடிவமைக்கும் நண்பர். த. சங்கர் (வணசிங்க அச்சகம்), பின் அட்டைக்காக என்னை புகைப்படம் எடுத்து உதவிய செல்வன் தனுஸ்கர், செல்வன் பவித்திரன் மணிசேகரன், இக் கவிதைகள் முகநூலில் வெளிவந்த வேளை தமது கருத்துக்களால் உற்சாகப் படுத்திய அனைத்து மத நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். ஒரு மனிதன் இயங்குவதற்கு அவன் சமூகத்தில் வெற்றியடைவதற்கு மிக முக்கிய காரணம் அவனது குடும்பமே. குடும்பத்தில் நிம்மதி நிலவினால் அவனால் / அவளால் எதையும் சாதிக்க முடியும். அந்த வகையில் நான் தொடர்ந்து இயங்குவதற்கு துணைநிற்கும் எனது அன்பு மனைவியும் எனது படைப்புக்களின் முதல் வாசகியுமான ஹஜேந்தினி மைக்கல், எனது அன்பு மகன்கள் ரொகான்ருக்ஷன், நிருஷான் ஆகியோரையும் மீண்டும் இத் தருணத்தில் மனதில் கொள்கிறேன்.

எனது சென்ற தொகுப்பை போலவே இத் தொகுப்பும் வெளிவருவதற்கு நிதிப்பங்களிப்பு நல்கிய எனது அன்பு நண்பரும் தட்டுங்கள்.com இயக்குன ருமான திரு. பேரம்பலம் சுதாகரனுக்கு (கனடா) எனது பேரன்பின் நன்றிகள்.

**- மகுடம் வி. மைக்கல் கொலின்**

(ஆசிரியர் - மகுடம்)

## சமர்ப்பணம்

என்னை இலக்கியத்திலும்

இறை உணர்விலும், பக்தியிலும்

வளர்த்த என் அம்மப்பா

அமரர். சலமோன் அந்தோனிப்பிள்ளைக்கு

*நன்றி :*

**திரு. பேரம்பலம் சுதாகரன்** (கனடா) இயக்குனர், தட்டுங்கள்.com

*ஆரம்பம் : 17-02-2021* (விபூதிப் புதன்)

## 01

**மண்ணி(ணா)ல் தோன்றிய**

**மனிதன்**

**மண்ணுக்கே திரும்ப வேண்டும்**

**என்ற தத்துவத்தின் ஆரம்பம்**

**விபூதிப்புதனயாய்**

**மலர்கிறது இன்று**

**மதத்தை மதியாமல்**

**மனிதத்தை உணராமல்**

**இன்று**

**உடலங்களை எரிப்பவர்கள்**

**குழந்தையின்** *

**உயிரற்ற உடலை வைத்து**

**இன ரீதியான அரசியல்**

**செய்பவர்களின்**

**அரசியல் சித்தாந்தத்தை**

**சிலுவையில் அறைவோம்.**



* *இஸ்லாமிய தாய்க்கு பிறந்து இறந்த குழந்தை 'கொரோனா' எனக் கூறப்பட்டு தாய்க்கு முகம் காட்டாமலேயே மருத்துவமனை நிர்வாகத்தால் எரிக்கப்பட்டது*

## 02

தட்டுங்கள் திறக்கப்படும்

திறக்காவிட்டால்

உடையுங்கள்!

கேளுங்கள் கொடுக்கப்படும்

கொடாது விட்டால்

பறித்துப் பெறுங்கள்!!

தேடுங்கள் கிடைக்கப்படும்

கிடைக்காவிட்டால்

போராடிப் பெறுங்கள்!!!

வாக்குகள் மாறும்

வாழ்க்கையும் மாறும்.



## 03

புதிது புதிதாக

தயாரிக்கப்படுகின்றன

சிலுவைகள்

ஆனால்

இங்கே

இயேசுவுக்குப் பதிலாக

இப்போதெல்லாம்

யூதாஸ்களே


சிலுவை சுமக்கிறார்கள்.

உங்களில்

இரண்டாவது

இயேசு

யார்? எவரோ?



## 04

**ஒலிவ மலை அடிவாரத்தில்**

**இயேசு ஓய்விலிருந்த வேளை**

**மறைநூல் வல்லுனர்களும்,**

**பரிசேயரும், சதுசேயரும்**

**யூதர்களும்**

**வேறு பலரும்**

**விலைமாது ஒருத்தியை**

**அவர் முன்னே**

**இழுத்து வந்தனர்**

**“இவள் தேவ சட்டங்களுக்கு**

**எதிராக விபச்சாரம் செய்கிறாள்**

**மோயீசன் சட்டப்படி**

**இவளைக் கல்லால் எறிந்து**

**கொல்ல வேண்டும்**

**உமது தீர்ப்பு என்ன ?”**

**அவர்கள் கேள்விக்கு**



“உங்களில் பாவம் செய்யாதவன்
இவள் மேல் முதல் கல்லை எறியட்டும்”
என்ற இயேசு
மண்ணில் எதையோ
எழுதத் தொடங்கினார்
மனிதத்தைத் தேடத் தொடங்கினார்

“ஆ”
பெண்ணின் அலறல் கேட்டு
நிமிர்ந்தார்
அவளது நெற்றிக் பொட்டிலிருந்து
இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

அடுத்த கல்லை
இயேசுவின் மேல்
எறிவதற்காய்
ஓங்கிய கரங்களுடன்
அவர்கள்...

தீர்ப்பிடல்கள்
தொடர்கின்றன...

## 05

பிறர்மேல்

தீர்ப்பிடாதீர்கள்

உங்களுக்குத் தீர்ப்பெழுத

பலர் காத்திருக்கக்கூடும்.

கெட்ட மரம்

நல்ல கனி தராது

நல்ல கனி தருவது

கெட்ட மரமாயிராது.

நல்ல கனி தரும்

மரமாயிருங்கள்

அன்றேல்

வெட்டி எறியப்படுவீர்கள்.



## 06

என்னைப்
பின் தொடர்பவர்கள் மீதும்
சிலுவை சுமத்தப்படும்
தினம் தினம்
அவர்கள்
தமக்கான சிலுவைகளைச்
சுமக்க வேண்டும்
உயிருக்குப் பயந்தவர்கள்
ஒதுங்கிக் கொள்ளுங்கள்
சிலுவை சுமந்தவர்களே
நாளை
உயிர்த்தெழவும் முடியும்
எங்கும்
போராடுபவர்களே
விடுதலைக் கனியை ருசிக்கமுடியும்
இதுவே உலகநியதி
புரட்சியின் புதியவிதி.



## 07

ஏற்றப்பட்ட விளக்கு

இங்கு

பாத்திரத்தால் மூடப்பட்டால்

இல்லை

கட்டிலின் கீழே

வைக்கப்பட்டால்

வெளிச்சம் வெளியே

தெரியுமா?

உள்ளவரிடம் எடுக்கப்படுபவை

இல்லாதவருக்குப் பகிரப்படும்

இல்லாதவர் சோம்பேறிகளானால்

இருப்பதும் எடுக்கப்படும்.

உழையுங்கள்

எந்த இலவசங்களும்

நீண்ட நாட்களுக்கு நீடிக்காது


உழைப்பவனுக்கே

உலகம் சொந்தம்.



## 08

ஆட்டுக் கொட்டிலின்
வாயில் வழியாக
நுழைபவரே
ஆடுகளின் மேய்ப்பன்.
வேறு வழியால்
வருபவர்கள் திருடர்களே
மேய்ப்பனின் குரலுக்கு
செவிசாய்க்கும்
ஆடுகளை அவன்
ஓநாய்களிடமிருந்து காப்பான்
போலி மேய்ப்பர்கள்
ஓநாய்களை கண்டவுடன்
ஓடி விடுவர்
சிலர் ஓநாய்களுடன் சேர்ந்து
ஆடுகளை பலிகொள்வர்
இந்த மேய்ப்பனை
சிலுவையில் அறைந்தாலும்
மீண்டு வருவான்
மீண்டும் வருவான்.



## 09

வானத்துப் பறவைகள்

விதைப்பதுமில்லை

அறுப்பதுமில்லை

களஞ்சியத்தில்

சேர்ப்பதுமில்லை


நாளைக்காக கவலைப்படாமல்

இன்றே வாழுங்கள்

அந்தந்த நாளுக்குரிய வாழ்வை


அன்றன்றே

அனுபவியுங்கள்.




## 10

என் வார்த்தையைக் கேட்பவன்
பாறையின் மீது
வீட்டைக்கட்டியவனாகிறான்
கேளாதவன் மணல் மீது
வீட்டைக் கட்டியவனாகிறான்.
மழை பெய்தது
பெருங்காற்று வீசியது
ஆறு பெருக்கெடுத்து ஓடியது
பாறையின் மீது இருந்த வீட்டை
அசைக்க முடியவில்லை
அது தமிழ் போல்
உறுதியாய் நின்றது.
உலகின் கண்களுக்கு
உறுத்தலாய் நின்றது.
மணல் மீதிருந்த வீடு
மணல்மேடாகியது
உங்கள் அத்திவாரங்கள்
மதங்களின் மீதல்ல
மக்கள் மனங்களில் உறுதியாகட்டும்
இல்லையேல்
மணல் மீது வீடுகட்டியவன்
நிலையே உங்களுக்கும்.



## 11

விதைப்பவன்
வீசிய விதைகளில்
சில வீதியோரம் விழுந்தன.
மிதிபட்ட விதைகள் போக
மிகுதியை வானத்து
பறவைகள் விழுங்கின.
பாறை மீது விழுந்த விதைகள்
முளைத்து ஈரமில்லாது கருகின.
முட்செடிகளின்
இடையே விழுந்த விதைகளை
முட்செடிகள் மூடிவிட்டன.
இன்னும் சில விதைகள்
நல்ல நிலத்தில் விழுந்தன
எழுந்தன
ஆனால்
நெல்மணிகளுக்குள்தான்
ஒன்றுமில்லை
எல்லாமும் மீண்டும்
முளைக்கும் திறனற்ற
மழுங்கடிக்கப்பட்ட
மரபுமாற்ற விதைகளாகின..
நிலம் மட்டுமல்ல விதைகளும்
நல்லவையாக தெரியப்படட்டும்.



## 12

தொண்ணூற்றொன்பது

ஆடுகளையும்

பாலை நிலத்தில் விட்டு விட்டு

காணாமற் போன

மிகுதியான

ஒரு ஆட்டை

தேடிப்போகும் மேய்ப்பன்

காணாமல் போன ஆடு

கிடைத்ததும்

முதல் வேலையாக

அதனை வெட்டிக் கறிசமைப்பான்

வழி தவறும் ஆடுகள்

இனி மந்தையில் சேர்க்கப்படாது

மேய்ப்பனின்

புதியதீர்ப்பு இது.



## 13

ஜெருசலேம்

தேவாலயத்தின் உள்ளே

சாட்டையுடன் இயேசு!

தேவாலயத்தை

வியாபாரத் தளமாக்கியவர்களைப்

பதம் பார்த்தது

அவரது சாட்டை

தேவனின் இல்லத்தை

அசுத்தப்படுத்தியவர்களை

அடித்து விரட்டினார்.

எங்கெல்லாம்

தேவனின் இல்லம்

அசுத்தப்படுத்தப்படுகிறதோ

கொலைக்களமாக


மாற்றப்படுகிறதோ

அங்கெல்லாம் நீங்களும்

இயேசுவாய் மாறுங்கள்.

உங்கள் கரங்களில்

மாறட்டும் சாட்டைகள்.



## 14

“யூதாஸ் ஸ்காரியோத்
மனுமகனை
முத்தமிட்டோ காட்டிக்கொடுத்தாய்?”
என்கிற உயிரை உலுக்கும்
இயேசுவின் வார்த்தைகள்
அவன் மனச்சாட்சியின்
கதவுகளை
இனித் தட்டாது.
இப்போது
முத்தம் வேண்டாமே
ஒரு ‘குறுந்தகவல்’ போதும்
யூதாசின்
ஒரு கரத்தில்
ஸ்மார்ட் போனும்
மறு கரத்தில்
மூவாயிரம் டொலரும்
அவனைப்பார்த்துச்
சிரித்துக்கொண்டிருந்தன.
காலங்கள் மாற
காட்டிக் கொடுத்தலுக்கான
விலையும் மாறும்
முறைகளும் மாறும்.



## 15

சத்தங்களின்றி
இன்னும்
காற்றில்
அலைந்துகொண்டுதானிருக்கிறது
மிகுதியான
யூதாஸ்களின்
முத்தங்கள்
இயேசுநாதர்களைத்
தேடியபடி.




## 16

விண்ணில் இருந்து
இறங்கிவந்த
உணவு நானே
என்னை உண்பவன்
இறப்பிலும்
உயிர் வாழ்வான்
என்றவரே
இந்தக் கொரோனா
வைரசு காலத்தில்
உணவாக நாம்
எதனை உண்பது..?
பலருக்கு இங்கு
உணவில்லை
வழங்குவதற்கு
சிலருக்கு இங்கு
மனம் இல்லை.




## 17

கானாவூர்த் திருமணத்தில்
தீர்ந்தது திராட்சை ரசம்
ஏழு ஜாடிகள் நிறைந்த தண்ணீரை
திராட்சை ரசமாக மாற்றினார் இயேசு.
ஜீவ ஊற்றை
அறியாத
எல்லோர் மனங்களிலும்
வழிந்து கொண்டிருந்தது
திராட்சை ரசம்
பற்றிய கனவுகள்
மட்டுமே.



## 18

இயேசுவே
ஒரு கன்னத்தில்
அறைந்தால்
மறு கன்னத்தையும்
திருப்பிக் காட்டலாம்
ஏழை விவசாயிகள்
எங்கள் வயிற்றில் அடிக்கும்
இவர்களுக்கு காட்ட
இன்னுமொரு வயிற்றுக்கு
நாம் எங்கே போவது?



# 19

முப்பது வெள்ளிக்காசுகள்
வீதியில் சிதறி விழ
ஓடிக்கொண்டிருந்தான்
யூதாஸ் காரியோத்.
காட்டிக்கொடுக்கத்
தெரிந்தவனுக்கு
தெரிந்திருக்கவில்லை
தனது துரோகத்தை
நினைத்து மன்னிப்பு
கேட்டிருப்பின்
காட்டிக்கொடுத்த
தன்னையும்
இயேசு
மன்னித்திருப்பார் என்று...



## 20

இயேசுவே

மூன்று ஆணிகளின் பிடியில்

சிலுவையில் தொங்கியது

நீர்மட்டும்தான்

என்றிருந்தேன்.

ஆனால் இங்கு

எல்லாக் கடவுளரும்


தொங்கிக்கொண்டு

தானிருக்கின்றனர்

உயிர்த்தெழமுடியாதபடிக்கு


படச் சட்டங்களாய்..

ஆணிகளின் பிடியில்.



## 21

ஏழு முறையல்ல
ஏழு எழுபது
முறைக்கு மேலும்
மன்னித்து விட்டோம்
இவர்கள்
திருந்துவதாயில்லை
யேசுவே உம்மைத் தேடுவதாக
நடிக்கிறார்கள்
மீண்டும் உம்மை
சிலுவையில் அறைய.!



## 22

**இயேசுவை**

**“தெரியவே தெரியாது” என**

**மூன்றாவது முறையும்**

**பேதுரு மறுதலித்தவுடன்**

**சேவல் கூவியது.**

**“அதிகாலைச் சேவல் கூவ முன்னர்**

**என்னை மூன்று முறை**

**மறுதலிப்பாய் “**

**என்ற இயேசுவின்**

**வார்த்தைகள் நிஜமாக**

**யூதப் படையிடமிருந்து**

**தப்பிவிட்ட திருப்தியில் பேதுரு.**

**மறுதலிப்புகளும்**

**தொடர்ந்து கொண்டேதானிருக்கின்றன.**

**காட்டிக்கொடுப்புகளுக்கு**

**சமாந்தரமாய்...**



## 23

ஐந்து அப்பங்களையும்
இரண்டு மீன்களையும்
ஆசி வழங்கி
ஐயாயிரம் பேருக்குப்
பகிர்ந்து கொடுத்து
மிகுதியானவற்றை
பன்னிரண்டு கூடைகள்
நிரம்பப் பெற்ற இயேசுவே
இங்கு எத்தனை ஆயிரம் வயிறுகள்
தினமும் பசியால்..?
மீண்டும் ஒருமுறை
உமது கரங்களை உயர்த்தி
ஆசி வழங்கமாட்டீரோ
இவர்களும் பசியாற...
மிகுதியாக
வேண்டாம்
மதிய உணவு
மட்டுமே போதும்.




## 24

ஓநாய்களிடையே
ஆடுகளை அனுப்புவதுபோல்
உங்களை அனுப்புகிறேன்
உங்கள் தலைமுடியெல்லாம்
எண்ணப்பட்டிருக்கின்றது.
என்னை ஏற்றுக் கொள்பவரையே
நானும் ஏற்றுக்கொள்வேன்.
என்னை மறுதலிப்போரை
நானும் மறுதலிப்பேன்.
போலியானவழிகாட்டல்களும்
வாக்குறுதிகளும்
தொடரலாம்
விடுதலையின் சாவி
என் கரங்களிலேயே
எக் காலத்திலும்
என் பெயராலன்றி
நீங்கள்
விடுதலை அடைய முடியாது!



## 25

பாலை நிலத்தில்
மோசேயால் பாம்பு
உயர்த்தப்பட்டதுபோல்
சிலுவை மரத்தில்
மானுட மகன்
உயர்த்தப்படுவான்.
ஒளி உலகில் வந்திருந்தும்
இருளையே விரும்புகிறவர்களே
கனி கொடாத அத்தி மர
நிலைதானோ உமக்கும்?



## 26

அன்பு மகனே யூதாஸ்!
மரியாள் கேட்கிறேன்
அந்த முப்பது வெள்ளிக் காசுகளை நீ
என்னிடம் கேட்டிருக்கக் கூடாதா?
வெறும் முப்பது காசுக்குத்தானா
என் மகனை முத்தமிட்டாய்?
அன்பு மகனே யூதாஸ்
உன்னை நினைக்கையில்
உன் மீதான என் கவலை தொடர்கிறது
என் மகனைக் காட்டிக்கொடுத்து
நீ பெற்ற
முப்பது வெள்ளிக்காசுகளுடன்
உன் அன்னை
உன்னை ஏற்றுக்கொள்வாளா..?
முத்தங்களும்
வெள்ளிக்காசுகளும்
கை மாறிக் கை மாறித்
தொடர்கிறதா..?



## 27

பன்னிரண்டு வயதில்

காணாமல் போன

இயேசுவை ஆலயமெங்கும்

தேடித்திரிந்த மரியாளைப் போல்

வீதிக்கு வீதி

காணாமலாக்கப்பட்ட

தமது மகன்களைத் தேடும்

மரியாள்கள் எத்தனை?

காலம் மாறினாலும்

தாய்மையின் சோகமும்

தீரவில்லை


அவர்தம் வீரமும்

மாறவில்லை.



## 28

கனி கொடுக்காத
அத்தி மரங்களுக்கு
அருகில்
வெட்டப்பட்டுக்
கிடந்தான்
மரம் வைத்தவன்.



## 29

பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்போரே

என்னிடம் வாருங்கள்

உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்

என்ற இயேசுவே!

எத்தனை கடவுளரிடம்

எத்தனை வேண்டுதல்கள்

அத்தனையும்

இன்னும் முற்றுப்பெறாமலேயே..

இறந்த லாசரைக் கல்லறையில் இருந்து

உயிருடன் எழுப்பியவரே

காணாமலாக்கப்பட்ட எம் உறவுகளை

மீட்டுத்தர மாட்டீரோ?



## 30

மீள வந்து
மன்னிப்பு கேட்டால்
தந்தை மன்னிப்பார்
சொத்தில் பாதியும் தருவார்
என்ற நம்பிகையில்
மீண்டும் மீண்டும்
வழிதவறும் இளையகுமாரர்கள்!
வெளிச்செல்லும் பாதைகளை
இங்கு அதிகப்படுத்துங்கள்
உள் வரும்
பாதைக்கான வாயில்களை
இழுத்துச் சாத்துங்கள்!



## 31

என் பெயரால்
எங்கே இரண்டு அல்லது மூன்று பேர்
ஒன்றாக கூடியிருக்கின்றார்களோ
அங்கே அவர்களிடையே
நான் இருப்பேன்
என உறுதியாகச் சொன்னவரே
எம் பாவங்களுக்காய் மரித்து
உயிர்த்த உமது நாளில்
உமது பேரால்
ஆலயத்துள் கூடியிருந்த
எம்மிடையை இல்லாமல்
நீர் எங்கே போனீர்?
குண்டுதாரிகள்
அல்லவா
கொன்று போனார்கள்!
எம்மைக் கொண்டு போனார்கள்!!



# 32

“ஏழைகளே, நீங்கள்
பேறுபெற்றோர் ஏனெனில்
இறையாட்சி உங்களுக்குரியதே
இப்பொழுது பட்டினியாய்
இருப்போரே,
நீங்கள் பேறுபெற்றோர்
ஏனெனில் நீங்கள்
நிறைவு பெறுவீர்கள்...” என
மலைப்பிரசங்கத்தின் மூலம்
உலகின் முதல் சமதர்மவாதியாய்
புரட்சிக் கருத்துக்களை
வெளியிட்ட யேசுவே
ஏழைகள் இன்னும் ஏழைகளாகவே..
பட்டினியாய் இருப்போர்
இப்போதும் பட்டினியுடனே..
எப்போது மாறும்
இவர்கள் நிலை..?
காத்துக் கிடக்கிறது
இப்போதும் கல்வாரி மலை!



# 33

“குழந்தைகளை
என்னிடம்
வர விடுங்கள்
விண்ணரசு அவர்களதே”
என்ற இயேசுவே
இங்கு
மண்ணரசில்
பச்சிளம் பூக்களை சிதைக்கும்
பாதகர் கழுத்தில்
பாறாங்கல்லைக் கட்டி
சமுத்திரத்தில் இறக்க
நீர் மீண்டும்
எப்போது வருவீர்?



## 34

பிள்ளை மீனைக்கேட்டால்
உங்களில் எந்தத் தந்தையாவது
பாம்பைக் கொடுப்பாரா?
முட்டையைக் கேட்டால்
தேளைக் கொடுப்பாரா?
இயேசுவே!
உமது கேள்விக்கான பதில்
அன்று
'இல்லை' என்றே
கிடைத்திருக்கும்.
ஆனால் இன்று
மக்கள் நாம்
எம் அரசிடம்
எதைக்கேட்டாலும்
எமக்குக் கிடைப்பது....?
வெற்றுவாக்குறுதிகளே!
மீறிக் கேட்டால்
சிறை திறக்கும்
அதையும் மீறினால்
உயிர் பறக்கும்...



## 35

“என் பெயரால்

பல இறைவாக்கினர் வருவார்கள்

தாமே உம்மை மீட்க வந்த

மெசியா என்பார்கள்

போர் முழக்கமும்

போர்ச்செய்திகளும் கேட்கும்

நாட்டை எதிர்த்து நாடும்

அரசை எதிர்த்து அரசும் எழும்

பஞ்சமும் நிலநடுக்கமும் சகஜமாகும்

பலர் நம்பிக்கையிழந்து காட்டிக்கொடுப்பர்

தமக்குள் அடித்தும் கொள்வர்

எனது பெயரால்

சிலுவை சுமந்து.



நம்பிக்கையுடன் இருக்கும்

எனது மக்கள்

நாளை விடுதலை பெறுவர்

எனது பெயரால்

அவர்களுக்கான

விடுதலை கிடைக்கும்”

என்ற இயேசுவே

எல்லாம் நடந்தது

எல்லாமும் நடக்கிறது

ஆனால்


இன்றுவரை எமக்கான

விடுதலை மட்டும்

கேள்விக்குறியாய்...

# 36

“கோதுமை மணி
மண்ணில் விழுந்து
மடியாவிட்டால் அது அப்படியே
இருக்கும்
அது மடிந்தால்தான்
மிகுந்த விளைச்சலைத் தரும்
தமக்கென்று வாழ்வோர்
தம் வாழ்வை இழப்பர்
தம் வாழ்வை பொருட்டாக
கருதாதோர்
நித்திய வாழ்வு பெறுவர்”
என்ற இயேசுவே
எங்களின் எத்தனை விதைகள்
தமக்காகவன்றி எமக்காக
மண்ணில் விழுந்தன
விளைச்சல் கிடைக்கும் என
எதிர்பார்த்த வேளையில்
எல்லாம் சிதைந்தன!
இனி எமக்கான விளைச்சலை
விதைக்கப்போவது
யார் எவரோ?



## 37

இயேசுவின் கட்டளைப்படியே
ஊருக்குள்ளிருந்து
கூட்டிவந்த
கழுதையின் மீது
இயேசுவின் பயணம்
ஆரம்பமாகப்போகிறது.
அரசனின் வருகையே
மிக எளிமையாக
அமைதியாகவிருக்கையில்
இங்கே சிலரின்
வருகை
அலாரம் பூட்டிய வாகனங்களில்
எம் நாட்டையே
குழப்புகிறதே!




## 38

ஜெருசலேம் வீதி வழியே
இயேசுவின் வெற்றிப்பயணம்
கழுதையின் மேலே
ஓர் அரசனைப்போல்
கரங்களில் ஒலிவ மரக்கிளையுடன்..
தங்கள் மேலாடைகளைக் கழற்றி
அவர் பவனிபோகும் வழியெல்லாம்
விரித்த மக்கள்கூட்டம்
“தாவீதின் மகனுக்கு ஓசான்னா” என்ற
கோஷத்துடன் அவரை அழைத்துச் சென்றனர்.
‘தேவகுமாரனுக்கு
ஓசானா பாடும்
இந்த கூட்டத்தில் சிலரே
இன்னும் சில நாட்களில்
“இவனைச் சிலுவையில் அறையும்”
என்று கோஷமெழுப்புவார்கள்
இந்த மனிதர்களே
இப்படித்தானோ?’
என்ற நினைப்பில்
தனக்குள்
சிரித்தபடியே அவரைச்
சுமந்து சென்றது கழுதை.



# 39

பாஸ்கா திருவிருந்து
ஆரம்பமாவிருந்தது
தனது சீடர்களின்
பாதங்களைக் கழுவி
வெள்ளைத்துணியால்
துடைத்த இயேசுவை
தடுத்தார் பேதுரு
“நான் உன் பாதங்களைக்
கழுவாவிடில்
என்னோடு உனக்கு பங்கில்லை”
என்றவர்
அவனது பாதங்களையும் கழுவினார்
இறுதியாக யூதாசின்
கால்களைக் கழுவும்போது
அவனது கால்கள் நடுங்கின
அவனது பாதங்களை
மெல்ல வருடி விட்ட இயேசு



அவனை நிமிர்ந்து பார்த்தார்

அவனது பார்வையில்

'என் சித்தப்படியல்ல

எல்லாமும்

உம் சித்தப்படியே நடக்கின்றன

நான் உமக்கு ஒரு கருவி

உலகிற்கோ துரோகி'

சொல்ல நினைத்தவன்

தலை குனிந்தான்.

ஒரு புன்முறுவலுடன்

அவன் கால்களை இயேசு

மெல்ல அழுத்த

அவன் நடுக்கம் கலைந்தது.

## 40

கெத்சமனித் தோட்டத்தில்
மறைவான ஓர் பகுதியில்
தனியனாக முழந்தாளிட்ட இயேசு
தனது தந்தையை நோக்கி
ஜெபிக்கத் தொடங்கினார்
தெய்வாம்சமற்று
மனிதனாய்
தனக்கு நேரப்போகும்
உபாதைகளை மனதில் இருத்தி
தந்தையிடம் பேசினார்
"என் தந்தையே நான்
பருகினாலன்றி
இத் துன்பக்கிண்ணம்



அகலமுடியாதென்றால்
உமது திருவுளப்படியே ஆகட்டும்”
இயேசுவே
இது உமக்கு மட்டுமல்ல
இது எமக்கான பாடம்
அவரவர் வாழ்க்கையில்
அவரவர்க்கான சிலுவைகள்
அவரவர் சிலுவைகளை
அவரவரே சுமக்க வேண்டும்
எமது சிலுவையை
சுமப்பது எமது கடமை
கடமையை மறந்தவர்
வாழத் தகுதியற்றவர்.
எனது
சிலுவையை
நானே சுமக்கிறேன்
எனது பாடுகளுக்கு
நானே பலியாகிறேன்
நாளை நானும்
உயிர்ப்பேன்
என்ற நம்பிக்கையில்.


## 41

இயேசுவை முத்தமிட்டுக்
காட்டிக் கொடுத்து
யூதாஸ் ஸ்காரியோத் பெற்ற
முப்பது வெள்ளிக்காசுகள்
கேட்பாரற்று
வீதியில் கிடந்தன
அந்த காசுகளைக் கொடுத்து
வாங்கிய நிலம்
'இரத்த நிலமாக'
இஸ்ரேலில்
இன்றும்
கவனிப்பாரற்றுக் கிடக்கிறது
காலகாலமாய்
காட்டிக்கொடுத்தலுக்கான பயனை
அனுபவித்தவர்
எவருமில்லை
ஆனாலும்
காட்டிக்கொடுத்தல்களென்னவோ
தொடர்ந்தபடியே...!



## 42

"இவனைச் சிலுவையில் அறையுங்கள்"
பிலாத்து தீர்ப்பினை எழுதியதும்
தன் கரங்களைக் கழுவி
இயேசுவின் ரத்தப்பலி
தன்னுடன் சேராது தப்பித்துக் கொள்கிறான்
அந்தப்பலி தம்மீதும்
தம் சந்ததி மீதும் தொடரட்டும்
என்ற யூதர்கள்
மனுமகன் மீதான
தம் வன்மத்தைத் தொடர்கின்றனர்
கரங்கள் பின்னால் கட்டப்பட்ட
இயேசுவின்
ஆடைகளைக்களைந்து
முட்களால் ஆன ஒரு முடியை
அவரது தலையில் பதிக்கின்றனர்



நள்ளிரவையும் தாண்டிய

அவரது மரண ஓலம்

தொடர்கிறது

தம் முட்கள் அழுத்தி

தேவமகன் படும்

வேதனையைக் கண்டு

சிலிர்த்திக் கொள்கின்றன முட்கள்

ரத்தத்தால் நனைந்த

அவரது கபாலத்தில் இருந்து

தம் அழுத்தத்தை

மெல்லத் தளர்த்திக் கொள்கின்றன.

மீண்டும் அவர் மீது

முள்முடியை அழுத்தும் அந்த

ராணுவ கரங்களில்

காறித்துப்பும்

முட்களின் சோகம்

யார்தான் அறிவார்?

## 43

பாடுகளின் பாதையில்
இடையில் வந்தான் சீமோன்
இயேசுவின் சிலுவையை
சில அடிதூரம்
இணைந்து சுமக்கும்
வரமும் பெற்றான்.
இங்கே பல பெற்றோர்
காணாமல்போன
வித்தாகிப்போன
தம் புதல்வர்களை நினைத்து
வாழ் நாள் முழுதும்
சிலுவை சுமக்கிறார்கள்
இணைந்து சுமக்க
சீமோனாய் வருவீரா
இயேசுவே!



## 44

பிலாத்துவின் முன்னே
மௌனம் சுமந்த இயேசுவாய்
உன் முன்னே என் மௌனம்.
என் உள்ளாடை களைந்து
என் அங்கங்களை ரசித்தபடியே
ஆயுதம் தேடும் உன் கரங்கள்
உங்கள் சந்தேகம் தீர்க்க
பாதுகாப்பைக் காரணம் காட்டி
எம்மை
நிர்வாணமாய் நடக்க வைத்தீர்
இதயம் கனக்க
ஒவ்வொரு அடியும்
எடுத்து வைத்தோம்.
துரோகத்தின் ரத்தம் யூதாசிடமிருந்து
கைமாறியதோ!
என் இனத்தின் வரலாறெங்கும்
துரோகத்தின் ரத்தத்துளிகள்
கூடவே பயணிக்கிறதே..?



## 45

கல்வாரிமலை மீது
நிமிர்ந்தேதான் நிற்கிறது
சிலுவைமரம்
உடலெங்கும் ரத்தத் துளிகள்
வடிய வடிய
தொங்கிக் கொண்டிருந்தார்
தேவமைந்தன்.
சிலுவை மரம்
தனக்குள் முனகிக்கொண்டது
அவமானச்சின்னமான என்னை
அடையாளச் சின்னமாக மாற்றி
உலகம் உள்ள நாள்முதல்
உயிர்ப்பின் சின்னமாக்கிய
முள் முடி சூடிய
மன்னவனே
உம்மை என் கரங்களால்
அணைத்துக் கொள்கிறேன்
உமது மக்கள்
உம்மை ஏற்காவிட்டாலும்
நான் உம்மை
ஏற்றுக்கொள்கிறேன் தேவனே!



## 46

விண்ணரசு விண்ணரசு என்று
மண்ணரசில் எங்கள்
ஆட்சிக் கனவுகளைத்
தகர்த்து விடுகின்றான்
எனவே
இவனைச் சிலுவையில் அறையுங்கள்

மானுடத்தின் மறுபதிப்பாய்
வந்துதித்த மனிதகுமாரன்
கேள்விகளால் எம் ஆதிமதக்
கருத்துகளைத் தகர்த்தெறியும்
தேவகுமரன்
எனவே
இவனைச் சிலுவையில் அறையுங்கள்

ஓய்வு நாளிலும்
இவன் வேலை செய்யலாம் என்கிறான்
மோயீசன் சட்டங்களை
தவறு என்கிறான்
எனவே
இவனைச் சிலுவையில் அறையுங்கள்



*(பெரிய வெள்ளி சிறப்புக் கவிதை)*

உலகின் ஒளி நானே என்கிறான்
நானே ஜீவ ஊற்றும் என்கிறான்
நானே மெசியா என்கிறான்
எங்கள் மத போதகர்களை
விரியன் பாம்புக் குட்டிகள் என்கிறான் எனவே

இவனைச் சிலுவையில் அறையுங்கள்

நோய்களைக் குணமாக்குகிறான்
பேய்களை ஓட்டுகிறான்
இறந்தவர்களை உயிருடன் எழுப்புகிறான்
தாம் எதிர்பார்த்திருந்த மீட்பர் இவர்தாமோ என
மக்கள் இவனை நம்புகிறார் எனவே

இவனைச் சிலுவையில் அறையுங்கள்

எங்கள் சாலமோன் மன்னன்
நாற்பத்தாறு ஆண்டுகள் கட்டிய
பேராலயத்தை இடியுங்கள்
மூன்றே நாளில்
நான் புதிதாய்க் கட்டுவேன் என்கிறான் எனவே

இவனைச் சிலுவையில் அறையுங்கள்

ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தையும் காட்டு என்கிறான்
ஏழு முறையல்ல எழுபது முறைக்கு
மேலும் மன்னிக்கச் சொல்கிறான்
தீட்டுப்பட்டோரை ஆலயத்துள்
அழைத்துச் செல்கிறான் எனவே

இவனைச் சிலுவையில் அறையுங்கள்

புரட்சிவாதியாய்
ஏழைகளைப் பற்றியே பேசுகிறான்
சாதியில் குறைந்தவளிடம்
தண்ணீர் குடிக்கின்றான்
ஒதுக்கப்பட்டோருடன்
சமபந்தி போசனமும் செய்கிறான்
ஆலயங்களில் எங்கள்
நீண்ட கால வியாபாரத்தை
அடித்து நொறுக்குகிறான்
எனவே

இவனைச் சிலுவையில் அறையுங்கள்.

## 47

காற்று வெளியெங்கும்
கலந்தது கண்ணீர்
கல்வாரி மலையெங்கும்
வீசிய காற்றும்
அழுது கொண்டேதானிருந்தது

சிலுவையில் தொங்கிய புனிதர்
மண்ணை நோக்கி
வில்லாய் வளைந்து நின்றார்

காலத்தை
முன்னும் - பின்னுமாய்
மாற்றப்போகும்
சரித்திர நாயகன்
தன்னுயிர்த் தியாகம்புரிந்தவன்
வீழ்ந்தாலும்
விதையாய் நின்றான்

இனி
உலகம் பேசட்டும்
கி.மு
கி.பி



# 48

ரத்தப் பூக்கள்
பூத்திருந்த கொல்கதா மலையில்
நட்டுவைத்த சிலுவையில்
தொங்கிய இறைமகன் இறக்கப்பட்டார்.

மக்களின் பாவங்களுக்காய்
மரித்த செம்மறி
உலகின் பாவம் போக்க
இழிவான சிலுவை மரணத்தைப்
பரிசாக ஏற்ற மகன்
கல்லறையில் வைத்து மூடப்பட்டார்
உலகைப் படைத்தவனுக்கு கிடைத்ததோ
இரவல் கல்லறை.

மூன்றாம் நாள்
கல்லறை வாசல் திறந்து பட
மரணத்தை வென்ற மகன்
வெற்றி வீரனாய்
உயிருடன் எழுந்தார் இயேசு
உயிர்ப்புடன் வெளியே வந்தார்.



முள்முடி சூடிய மன்னவன்
யூதர்களின் அரசனாய்
மூன்று ஆணிகளின் பிடியில்
சிலுவையில் தொங்கியவன்
மீண்டும் உலகை ஆள
உயிருடன் வந்தார்
சிலுவை மகன்.

"இந்த ஆலயத்தை இடியுங்கள்
மூன்றாம் நாளில்
மீண்டும் கட்டுவேன்"
என்ற வார்த்தைகள் மெய்ப்பட
எழுந்தார் இயேசு.

ஒரு சந்தியா காலப் பொழுதில்
புதிய சங்கீதம் கேட்கிறது
விண்ணும் மண்ணும் அதிர
தேவமைந்தன் உயிர்த்தெழுந்தார்
ஆர்ப்பரிப்போம்
அல்லேலூயா!
ஆண்டவர் உயிர்த்தார்
அல்லேலூயா!

ஆனாலும் இன்றும்
ஈழத்தமிழர் வாழ்க்கை
சிலுவையில் தான்
தொங்குகிறது!

● ● ●

வேதாகமத்தின் தொனியை உள்வாங்கிக் கொண்டு அதில் இடம் பெற்ற பல உவமைக் கதைகளையும் உருவகங்களையும் நமது காலத்திற் கேற்ப மறுவிளக்கமும் மறுவாசிப்பும் செய்துள்ள வகையில் இந்தக் கவிதைகள் நவீனத்துவக் கவிதைகளாக வெளிப்பட்டுள்ளன. இந்தக் கவிதைகளை வாசிக்கும்போது ஒவ்வொரு பக்கத்திலும் வேதாகமத்தின் மொழியின் ஓசை நுட்பத்தையும் முன்மொழிவுத் தாள லயங்களை யும் உணர்ந்துகொண்டே வாசிக்க முடிந்தது.

- பேரா. அ.ராமசாமி

'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' இன்றைய நவீன கால வாழ்வியல் போக்கினையும், அறம் விலகிய சமயப் பாங்கினையும் சாடுகின்றதாக அமைவதும் நோக்கத்தக்கதாகும். தனது புதுக் கவிதைகள் ஊடாக சமூக மாற்றத்திற்கான செய்தியினையும் தொட்டு செல்வது அவரது சமூகம் சார்ந்த பார்வையினையும் வெளிக் காட்டு கின்றது. காலத்தின் புதிய வரவாகிய 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்கிற மைக்கல் கொலினின் விவிலிய மீள்வாசிப்பு கவிதைத் தொகுப்பானது புதிய முறையில் விவிலியத்தினை சிந்திக்கத் தூண்டுகின்ற தூண்டிலாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

- அருட்பணி . அ. அகஸ்தீன் நவரெத்தினம்



மகுடம்

ISBN: 978-624-5849-00-0
9 786245 849000
300.00